Regd. No. M. 4593. 'KUDI ARASU' 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

வருட சந்தா ரூ. 5. தனி வெளியீடு. [illegible] 0-1-6

மலர் 18 | சனிக்கிழமை, 4-8-1945 ஆடி-மீ 20உ | இதழ் 43

## காந்தியும் ஜாதிப்பாகுபாடும்

(சர் சங்கரநாயர் 1935வருக்கு முன் சொன்னது)

தோழர் அம்பேத்கார் அவர்கள் இந்து மதத்தை விட்டு வேறு மதத்திற்கு மாறிவிடவேண்டும் என்று சொன்னவுடன், காந்தியார் உள்பட பல இந்துமத பிரசாரகர்களுக்கு ஆத்திரம் பொங்கிவிட்டது. ஆனால், ஜாதிவித்தியாசம் தீண்டாமை ஆகிய விஷயங்களில் காந்தியார் அபிப்பிராயத்தைப் பற்றி பிரபல சீர்திருத்தவாதியும், தேசிய வாதியும், காங்கரஸ் மகாநாட்டுக்குத் தலைமை வகித்த காங்கரஸ் தலைவருமான சர். சி. சங்கரநாயர் சொல்லி இருப்பதைக் கவனித்துப்பாருங்கள். (அவர் சுயமரியாதைக்காரர் அல்ல)

"தோழர் காந்தியார் எல்லாப் பொது மக்களுக்கும் கல்வி புகட்டப்பட வேண்டியதில்லையென்றும், அதிலும் ஆங்கிலக் கல்வி அறவே ஒழிக்கப்படவேண்டும் என்றும் விரும்புகிறார், ஏன் அவர் அவ்வாறு கருதுகிறார் என்று பார்த்தால், கல்வி கற்றுவிடுவதினால் பொது மக்கள் தாங்கள் இருந்து வரும் வாழ்வில் அதிருப்தியடைந்துவிடுவார்கள் என்பது ஒன்றேயாகும். இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டுமானால், அந்தந்த வகுப்பார் தங்கள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் தற்கால நிலைமையோடு திருப்தியடைந்திருக்கவேண்டும்—அதாவது அடிமை எப்பொழுதும் அடிமையாகவே இருக்கவேண்டும் என்பதாகும். அவர் அந்த முடிவிற்கு வந்ததற்குக் காரணம், தாம் வருணமுறைப்படி ஜாதிப் பாகுபாட்டை ஒப்புக்கொண்டதேயாகும்.

"மேலும் காந்தியார் 'வருணாச்சிரமம்-ஜாதிப் பாகுபாடு—என்பது மனித இயற்கைக்கே இசைவானது என்றும், இந்துமதமென்பது அவ்வியல்பான ஒழுங்கை சாஸ்திரீக முறைப்படி வகுத்திருக்கிறது என்றும், இவ்வெண்ணம் மனிதனுக்குப் பிறப்பிலிருந்தே தோன்றக் கூடியதாகும் என்றும், எனவும் தான் நினைத்தமாத்திரத்தில் தனது வரு[illegible] மாற்றிக்கொள்ளவோ அல்லது, நிராகரித்துக்கொள்ளவோ முடியாது என்றும், ஆத்ம உணர்ச்சியைக் கருதும் ஒவ்வொருவனும் சமபந்தி போஜனத்தையும் கலப்புமணத்தையும் தடுக்கவேண்டும்' என்றும் கூறியிருக்கிறார்.

"பஞ்சமர்கள் என்றோ அல்லது மற்றும் அதுபோன்ற பல பேர்கள் என்றோ அல்லது வேறு எந்த நாமத்தால் அழைக்கப்பட்ட மக்களானாலும் சரியே, அவர்கள் யாவரும் தனியாகப் பிரிக்கப்பட்டு, உயர்ஜாதிக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற மக்களுக்கு ஊழியஞ்செய்து உழல்வதே அவர்களின் கடமை என்பதாக அவர் நினைக்கிறார் போலும்!

"அவர் எழுத்திலிருந்து நாம் அறியக்கிடப்பதாவது, இந்திய சரித்திரத்தைப் பற்றிய அறிவு அவருக்கு மிகக் குறைவு என்றோ அல்லது அவரது ஜீவியத்தின் முக்கிய பாகம் பிற நாடுகளில் வாழ்க்கையை நடத்தினவர் என்றோ அல்லது ஒரு வேளை இந்நாட்டில் ஜாதி பாகுபாட்டால் ஏற்பட்டு வரும் தீமைகளை தாம் அறியாமல் இருந்திருக்கவேண்டும் என்பதாகவோ அது காட்டுகிறது. அப்படி இல்லையானால் கீழ் காணப்படுகிற விஷயங்களை அறிந்திருப்பார்.

1. "இந்தியாவை அந்நியர்—அதாவது மகமதியர், ஆங்கிலேயர் முதலானவர்கள் ஜயித்து ஆளுவதற்கு இந்நாட்டில் உள்ள ஜாதிப்பாகுபாடே காரணமாகும். மேலும் அவர்கள் தங்களது ஆட்சியை செலுத்திவருவதற்கும் தாழ்த்தப்பட்ட மக்களே காரணமாகும். அவர்களது உதவிதான் மிகவும் ஆதரவை அளித்து வரக்கூடியதாகும்.

2. "இந்தியாவில் அநேகமான பேர் கிறிஸ்தவ மதத்திலும் மகமதிய மதத்திலும் மாறினதற்கு இந்தியாவில் உள்ள ஜாதிப் பிரிவினையேயாகும்.

3. "மனித சமூகத்தின் இழிவிற்கே இதுதான் பொறுப்பாளும், பழைய காலத்திலிருந்த அடிமையின் இழிவோ, அல்லது தற்காலத்தில் உள்ள அடிமையின் இழிவோ, அல்லது வேறு எதுவானாலும் இத்தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒன்றாகவும் சமமாகாது.

4. "இந்தியாவின்கண் உள்ள இந்துக்கள்—மகமதியர்கள் பிராமணர்கள்—பிராமணரல்லாதார்கள் என்று சொல்லக்கூடிய கட்சி பிரதி கட்சிகள் இருப்பதற்கும் இந்த ஜாதிப்பிரிவே காரணமாகும்.

5. "சமூக முன்னேற்றத்திற்[illegible] அல்லது பொருளாதார மு[illegible] இந்தோ, அல்லது தேசிய மு[illegible]த்திற்கோ ஆனாலும் சரியே இந்த ஜாதிப் பிரச்சினைதான் பெரும் தடையாய் இருக்கிறது.

"ஆகையால் ஏதோ அங்குமிங்குமுள்ள சில அற்பமான குறைகளைத் துடைத்துவிட்டு, முக்கியமான, ஜாதிப்பிரிவினைக்கே அஸ்திவாரமான கோட்பாடுகளையெல்லாம் தோழர் காந்தியார் அப்படியே ஆதரித்து வருகிறார்.

'மெக்காலே பள்ளிக்கூடத்தில் 4வது பாரம் படிக்கிற ஒரு பள்ளிப்பையன் கூட சம்மதியாத ஒரு பெரிய விசாரணையில் இறங்கியிருக்கிறார். அதாவது ஜாதிப் பாகுபாடு இருந்தாகவேண்டும் என்பதுபற்றியும் அதனால் லாபம் இருக்கிறது என்பதையும் கண்டுபிடிக்க பெரியதொரு ஆராய்ச்சியில் இறங்கி இருக்கிறார்.

"இந்த ஜாதிப்பாகுபாடு சம்பந்தமான விஷயங்களால் ஏற்படக்கூடிய தீமைகளையும் குறைகளையும் பற்றிய ஞானம் அவருக்கு இல்லை என்றுதான் சொல்லவேண்டும், அது சம்பந்தமான ஆதாரங்களையும் அவர் பார்த்திருக்கவில்லை என்றுதான் தெரிகிறது.

"அன்றியும் அவர் ஜாதி பாகுபாட்டை ஆதரிப்பதானது உயர்ஜாதிக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களுடைய ஆதரவைத் தேடிக்கொள்வதற்காகவேயாகும். ஏன் அவர்களுடைய ஆதரவைத் தேடுகிறார் என்றால், அவர்கள்தான் அவருடைய வேலைக்கு பண உதவியளிக்கிறார்கள். அவர்கள் உதவாவிடில் அவருடைய திட்டமெல்லாம் பாழாய் போய்விடும்.

"அவருடைய சிஷ்யர்களிலேயே ஒருவர் இந்நாட்டில் இருந்த கலைகளையும் சாஸ்திரங்களையும் இந்த ஜாதிப் [illegible]

பிரிவே அழிந்துவிட்டது என்று கூறியிருக்கிறார். 'இந்தியாவானது ஒரு காலத்தில் எல்லாக் கலைகளுக்கும், (விஞ்ஞான) சயன்சு முதலிய சாஸ்திரங்களுக்கும் பிறப்பிடமாயிருந்து புகழ் பெற்றும் வந்தது. அத்தகைய ஒரு நாடு இப்பொழுது தாழ்த்தப்பட்டு, சுதந்திர மற்று; அடிமையாக்கப்பட்டு இருப்பதற்கும், மக்கள் சுதந்திரமற்று வாழ்வதற்கும் காரணமாய் இருந்து வருவது இந்த ஜாதிப்பாகுபாடு ஒழிந்து போகும் என்ற பயமேயாகும்' என, ஹிந்து ரசாயன சாஸ்திரத்தைப் பற்றிய சரித்திரம் எழுதிய ஸர். பி. சி. ரே. அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

'இந்நாட்டில் உயர்ந்த சர்க்கார் உத்தியோகத்திற்கு இன்றியமையாத கல்வி வேண்டாம் என்பதும், இந்தியர் கைத்தொழில் உற்பத்திக்கும் உலோக அபிவிருத்திக்கும் அவசியமான கல்வி தேவையில்லை என்பதும் தோழர் காந்தியாரின் அபிப்பிராயம்.

[illegible]வண்ணத்திற்கேற்பவே காந் [illegible]ாசியில் உள்ள ரேஷனல் ஹிந்து [illegible]கலாசாலையையும், அலிகாரிலிருக்கும் மகமதிய சர்வகலாசாலையையும் ஒழிப்பதற்காக அரும்பாடுபட்டார். மேல்நாட்டுக் கல்வியையும், கீழ்நாட்டுக் கல்வியையும் அக்கலாசாலைகளில் போதிக்கப்பட்டு வந்திருந்தது. காந்தியாருடைய பெருமுயற்சி யாவும் இவ்விஷயத்தில் நல்லதிர்ஷ்ட வசமாக சித்தியளிக்காமல் போய்விட்டது.

"தோழர் காந்தியார் அவ்வாறு ஜாதி பாகுபாட்டை ஆதரித்ததால் உயர்ந்த ஜாதியார்களின் ஆதரவும், ஹிந்துமதத்தின் முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளும் அவருக்கு பக்கபலமாயிருக்கின்றன. அவரும் அவருடைய சகாக்களும், மகமதியர்களும், மகமதிய ரல்லாதார்கள் என்ற பிரச்னையை பலப்படுத்தி அவ்விரு வகுப்பாருக்குள்ளும் பெரிய பிளவுகளை உண்டுபண்ணியும் வருவதோடு இதைவிட மேலாக இந்தியர்கள், ஆங்கிலேயர்கள் என்ற பிரச்சினையையும் உண்டாக்கி இவர்களுக்குள்ளும் விரோதபாவத்தையும், வெறுப்பையும், பயத்தையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

"ஆகவே சீர்திருத்தவாதிகள் எனப்படுபவர்கள் யாவரும் சிறப்பாக இந்துப்பெண்கள் மகமதியப்பெண்கள் முதலானவர்களிடம் உள்ள குறைகளை நீக்கி அவர்களின் நிலையை உயர்த்தப் பாடுபடவேண்டும். அவர்களின் ஒத்துழைப்பும் முன்னேற்றமுமில்லாமல் இந்திய நாடானது ஒருநாளும் நாகரீக தேசங்களோடு சமமாகப் பாவிக்க முடியாது என்பதாகும்.

'தோழர் காந்தியார் மற்றொருபுறம், மகமதியர்கள் நினைத்துக்கொண்டிருக்கும் வீண் எண்ணம் எல்லாம் ஆசை

## மதுரை ஒய். எம். சி. ஏ. மண்டபம்

### கிறிஸ்தவ மண்டபமா? அல்லது அக்ரகார மண்டபமா?

(பி. இராஜமணி சாத்தூர்)

நமது நாட்டில் ஒய். எம். சி. ஏ. ஹால் என்ற பெயரால் கிறிஸ்தவ வாலிபர்கள் முக்கியமான நகரங்களில் கிறிஸ்தவர்கள் சௌகரியத்திற்காகக் கட்டப்பட்டுள்ள மண்டபங்களைப் பற்றி திராவிடப் பெருமக்கள் யாவரும் அறிந்த விஷயமேயாகும். 1844-ஆம் ஜூன் மாதம் 6-ந்தேதியன்று ஜார்ஜ் வில்லியம் என்னும் வர்த்தக இளைஞர் லண்டனில் ஸ்தாபிதார். இன்று 66 நாடுகளில் 10308 கிளைச்சங்கங்களிருக்கின்றன. அவ்வுயசங்கத்தின் ஒரு இடம் தான் மதுரையில் மியூனிசிபல் கட்டிடத்திற்கு முன்பாக 1928ம் வருடம் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவில் மிகவும் நேர்த்தியான முறையில் கட்டியிருக்கின்றார்கள். இதில் பல அறைகளிருக்கின்றன. மதுரைக்கு வரும் கிறிஸ்தவர்கள் சௌகரியமாக இதில் தங்கியிருப்பார்கள். ஆனால் சில ஆண்டுகளாக இதில் கிறிஸ்தவர்களுக்கே இடம் கிடைப்பது கிடையாது. பெரும்பாலும் பார்ப்பனர்களுக்கே வாடகைக்கு அறைகள் விடப்பட்டு வருகின்றன. கிறிஸ்தவர்கள் நன்மைக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்நிலையம் இன்று ஆரியர்களது நலனை தேடிச் சென்றிருக்கின்றது. கிறிஸ்தவரல்லாத திராவிட மக்களது நிலைதான் பரிதவிக்கத்தக்க நிலையில் உள்ளது என்றால் திராவிட கிறிஸ்தவர்களது நிலைமை இன்னும் மிகவும் மோசமாகவிருக்கின்றது. ஆரியர்களது அட்டகாசத்திற்குப் பயந்து அவர்களது கொட்டத்தை திராவிட நாட்டில் அடக்கித்தீர்வது என்றே திராவிட மக்களில் பெரும்பாலோர் கிறிஸ்தவ மார்க்கத்திற்குச் சென்றனர். ஆனால் நடைபெற்று வருவது என்ன? ஆரியத்தை அழிக்க வேண்டிய சமூகம் இன்று கிறிஸ்தவமார்க்கத்தில் புகுந்துகொண்டு ஆரியத்திற்கு தலைவணங்கி நிற்கின்றது.

கல்லூரிகளிலே படிக்க வந்த வெளியூர் கிறிஸ்தவ மாணவர்களுக்கு மதுரை ஒய். எம். சி. ஏ. ஹாலிலே இடமில்லை. அம்மாணவர்கள் தங்க இடமின்றித் தவிக்கின்றார்கள். அவர்கள் அமர வேண்டிய இடத்திலே ஆரியர்கள் இடம் பெற்றிருக்கின்றார்கள். ஒய். எம். சி. ஏ. நிர்வாக அதிகாரிகள் இதனைச் சிந்தித்துப் பார்த்து குறைகள் நீக்கவேண்டிய வேலைகள் செய்ய கேட்டுக்கொள்கின்றேன்.

களுக்கு இடங்கொடுக்கக்கூடியதென்றும், இந்து மதத்தில் உள்ள குலாச்சாரம் நியாயமானதென்றும், நினைக்கிறார். தற்காலத்தில் உள்ள பெண்களின் நிலைக்குக் காரணமான ஜாதி அனுஷ்டானத்தையே நாம் ஆதரிக்கவேண்டும் என்றும், அதையே பின்பற்றவேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறுகிறார். ஒடுக்கக்கூடிய அல்லது அடக்கி ஆளக்கூடிய சட்டங்களை ஆதரித்தும் வருகிறார். இச்சட்டங்கள்தான் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேறவிடாமல் அடிமைப்படுத்தி, அறிவற்று, சுயமரியாதையற்று இருக்கச்செய்திருக்கிறது. நம்முடைய எதிரிகள் நமக்கு சுயஆட்சி நடத்தும் சக்தியில்லை என்று சந்தேகிக்கச் செய்வதோடு மட்டும் நின்றுவிடாமல், நமக்குச் சுயஆட்சி (Home Rule) இந்தியாவிற்கு அளிப்பதைத் தாமதிக்கும்படியாகவும், அதற்கான நியாயங்களை அவர்கள் கூறுவதற்கான வசதிகளையும் தோழர் காந்தியார் ஏற்படுத்திவிட்டார். நான் முன்கூறியபடி, அவர் எல்லாத் துறைகளிலும் அதாவது சீர்திருத்தவாதிகள் முயல்கிற சகல மார்க்கங்களிலும், குல வித்தியாசத்தையும், வகுப்பு வித்தியாசத்தையும் வளர்ச்சி செய்து கொண்டும் தேசம் பிற்போக்கடையும்படியான காரியங்களைச் செய்துகொண்டும் வந்திருக்கிறார்."

## 'குடி அரசு' பைண்டு வால்யூம்

"குடி அரசு" பைண்டு வால்யூம்கள் விற்பனைக்குத் தயாராக இருக்கிறது) 4-வது வருட முதல் 13-வது வருடம் வரை (6-வது வருடம் நீங்கலாக) கிடைக்கும். ஒரு வருட வால்யூமின் விலை ரூ. 5—0—0. தபால் செலவு பிரத்யேகம். வால்யூமின் எடை அதிகமாக இருப்பதால், ரயில் பார்சல் மூலம் வரவழைத்துக் கொள்ள சௌகரியமுள்ளவர்கள் ஆர்டர் கொடுப்பது நலம்.

"குடி அரசு" பதிப்பகம்,

ஈரோடு.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்

# திருச்சி பொன்மலை திராவிட வாலிபர் கழக 5-வது ஆண்டுவிழா

## பெரியார் தலைமைவகித்தார்

28-7-45-ந் தேதி மாலை திருச்சி பொன்மலை திராவிட வாலிபர் கழகக் கட்டிடத்தில் 5வது ஆண்டு விழா நடந்தது. மாலை 6 மணி முதல் 10 மணி வரை தோழர்கள் நக்கீரனார் எம். ஏ., அண்ணாதுரை எம். ஏ., டி. பி. வேதாசலம் பி. ஏ., வீரமணி ஆகியோர் பேசினார்கள்.

இரவு 11 மணி முதல் 2 மணி வரை அண்ணாதுரை அவர்கள் எழுதிய, 'அவன் பித்தனா' என்னும் நாடகம் பெரியார் தலைமையில் நடந்தது. தொழிலாளத் தோழர்கள் உட்பட 5000-க்கு மேற்பட்ட மக்களும், ஏராளமான பெண்களும் மாலை 5 மணி முதல் நள்ளிரவு 2 மணி வரை மிக்க உற்சாகத்தோடு இருந்து கேட்டும் கண்டும் களித்தார்கள். அடிக்கடி மழையின் தொல்லை இருந்தும் கூட்டம் கலையாமல் இருந்தது.

பட்டைசாதம், தயிர் சாதம் விலைக்கு வழங்கப்பட்டன. மாநாடுபோல் ஆண்டுவிழா நடந்தது. வெளியூர் தஞ்சை செட்டிநாடு, புதுக்கோட்டை, கரூர், கோவை முதலிய பாகங்களில் இருந்து மக்கள் அனேகர் வந்திருந்தார்கள். நாடகத்தின் மனம் திருப்பும்படியான பேச்சுகளும் மருண்டு விழித்து அறிவு பெறும்படியான நடிப்புமாய் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

பெரியார் தலைமையுரையில் நம் நாட்டிற்கு வெளியாரால்விடுதலை, விமோசனம் என்பது தேவை இல்லாததும் பொருள் இல்லாததுமான பேச்சு என்றும் மானமும், அறிவும், கட்டுப்பாடும் இல்லாதது தான்குறை என்று தலைப்பின் ஒரு மணி நேரம் பேசினார். கழகத் தலைவர் தோழர் எஸ். நடராசன் அறிக்கை படித்தார். தோழர் வேதாசலம் அவர்கள் நம் நாட்டுப் பொருளாதாரம் பெருக்கத்திற்கு திராவிடநாடு மத்திய அரசாங்கத்தில் இருந்து விடுதலை [illegible] புள்ளி விவரங்களுடன் 1 மணி நேரம் பேசினார். தோழர் நக்கீரனார் எம். ஏ., அவர்கள் நமது முன்னணி வேலை வாலிபர்கள் இடம் இருக்கிறது என்றும், அவர்களுக்கு உலக அறிவும், கல்வியும் வேண்டும் என்றும் பேசினார். வீரமணி பார்ப்பனியப் புரட்டிலும், மோகத்திலும் இருந்து மக்கள், பெண்கள் விடுபடவேண்டும் என்பது பற்றிப் பேசினார்.

தோழர் அண்ணாதுரை தற்கால நிலை என்பது பற்றி நம் கட்சியில் உள்ள குழப்பம் அவற்றின் தன்மை மற்றும் பல கட்சிகளின் காரணம் நம் நிலை ஆகியவைபற்றி பேசினார். தோழர் பெருமாள் நன்றி கூறினார்.

பொதுவாக யாவரும் பொது உடைமைக்காரர்கள் நிலையைப் பற்றிப் பேசி திராவிடநாட்டில் உள்ள பொது உடைமைக்கட்சியில் பார்ப்பனர்களும் காந்தியமும் இல்லாவிட்டால் திராவிட கழகத்திற்கும் பொதுஉடைமைக் கட்சிக்கும் வித்தியாசமில்லை என்று கூறி தமது திட்டத்தை விளக்கி உண்மைப் பொது உடைமைக்காரர்களை அழைப்பதுபோல் இருந்தது.

## அறிவிப்பு

தோழர்களுக்கு, கடந்த 4 திங்கள்களாக தொடையின் பின்பாகத்தில் சிரங்குகள் ஏற்பட்டு அதற்கு டாக்டர் சிகிச்சை செய்து வருகிறபடியால் 4 வாரங்களுக்கு வெளியில் செல்லாமல் சிகிச்சை செய்துகொள்ள வேண்டுமென்று டாக்டர் அபிப்பிராயம் தெரிவித்தபடியால் அதன்படி இருந்து உடல் நலம் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனதால் பல ஊர்களின் தோழர்களின் அழைப்புக்கு வரமுடியாமைக்கு வருந்துகிறேன். விழாக்களை நடத்துவதற்கு என்போன்ற இயக்கத் தொண்டர்களின் உதவியைக் கொண்டு நடத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கே. கே. நீலமேகம்,
திராவிடர் கழகம், கும்பகோணம்.

# பெங்களூரில் பெரியார்

தோழர்கள் பெரியார் இராமசாமி, ஜனார்த்தனம் முதலியவர்கள் 8-ந் தேதி பெங்களூர் வருகிறார்கள்.

அன்று (8-8-45 புதன்) பெங்களூர் சிட்டி ஆர்ய வித்தியாசாலை மைதானத்தில் மாலை 6½ மணிக்கு திராவிட கழகம் என்பது பற்றி சொற்பொழிவாற்றுவார்கள்.

10-ந் தேதி காலை ஈரோடு திரும்புவார்கள்.

C. சீனிவாசன், தலைவர்,
திராவிட கழகம், பெங்களூர் சிட்டி.

# கரூர் சுயமரியாதை மாநாடு

கரூர் தாலுகா சுயமரியாதை மாநாடு 2-8-45 காலை 9-30 மணிக்கு கரூர் அம்பிகை டாக்கீஸில் தோழர் டி. பி. வேதாசலம் பி. ஏ. தலைமையில் நடைபெற்றது. 2000 மக்கள் கூடியிருந்தனர்.

மாநாட்டின் ஆரம்பத்திற்கு முன் தலைவர்கள் ஊர்வலமாகக் கொட்டகைக்கு அழைத்து வரப்பட்டனர். ஜோலார்பேட்டை வி. பார்த்தசாரதியவர்கள் கொடியேற்றிவைத்தார். தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ. மாநாட்டைத் திறந்துவைத்து 2 மணி நேரம் பேசினார். தோழர் பி. சண்முகவேலாயுதம் தலைவரைப் பிரேரேபிக்க தோழர்கள் பார்த்தசாரதி, எஸ். ஆர். சுப்பிரமணியம், ஏ. பி. ஜனார்த்தனம், ஏ. சித்தையன், எஸ். வீராசன் ஆகியவர்கள் ஆமோதித்தனர். பின் தலைவர் தலைமையுரையாற்றினார். மாநாட்டில் தோழர்கள் சாரதி எம். கே. பழனிசாமி வாழ்க்கை ஒப்பந்தம் (கலப்புத் திருமணம்) பெரியார் அவர்கள் முன்னிலையில் செய்து கொண்டனர். பின் பெரியாரவர்களின் 2 மணி நேரப் பேச்சுடன் காலைக் கூட்டம் முடிவுற்றது. மாலை 3½ மணிக்கு மீண்டும் கூடி முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு மாநாடு 5 மணிக்கு மேல் முடிவுற்றது. (மாநாட்டிற்கு ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் பல நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் வந்திருந்தனர். முழு நடவடிக்கைகளும், தீர்மானங்களும், வரவேற்புரையும் அடுத்த வாரம்).

## கவி பாரதிதாசன் நிதி

புரட்சிக் கவிஞருக்கென்று திரட்டப்படும் நிதிக்குத் தாங்கள், நன்கொடை அனுப்பிவிட்டீர்களா?

இன்றே அனுப்புக! தமிழரின் தன்மானக் காவலனுக்குத் தக்கது செய்யத் தவறாதீர்!

எஸ். கிருஷ்ணராஜ் ரெட்டியார்,
நாமக்கல், P. O., சேலம்.

வாந்தி, மயக்கம், தலைவலி, மலச்சிக்கலுக்கு

காயசுத்தி லேகியம்

# இவ்வார நிகழ்ச்சிகள்

### சென்னை மாகாண திராவிட மாணவர் மாநாடு

மேற்படி மாநாட்டை விரைவில் நடத்த 7-8-45 செவ்வாய் மாலை 6 மணிக்கு கடலூர் O. T. திராவிட மாணவர் கழக நிலையத்தில் வரவேற்புக் குழு அமைக்கும் பொருட்டு திராவிட மாணவர் ஆலோசனைக் குழுவின் கூட்டம் நடைபெறும்.

திராவிட மாணவ கௌன்சில் உறுப்பினர்கள் யாவரும் இதனையே அழைப்பாக ஏற்றுத் தவறாது வரக்கோருகிறேன்.

சி. இளவழகன்,
கன்வீனர்—டெலிகேட்.

### சென்னை

சென்னை தண்டையார்ப்பேட்டை, 450. திருவொற்றியூர் நெடுஞ்சாலை (போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரில்) வில் இளைஞர் நல்உறவுக் கழகத்தின் தொடக்க விழா 5-8-45-ந் தேதி மாலை 5¼ மணிக்கு தோழர் அ. இளங்கோவன் தலைமையில் கீழ்வரும் நான், மீனாட்சிசுந்தரம் அவர்களால் நடத்திவைக்கப்படும். தோழர்கள் கே. அப்பாதுரை பிள்ளை, பி. கணேசன் முதலியவர்கள் பேசுவார்கள்.

* * *

வடசென்னை மத்திய திராவிடர் கழகக் கமிட்டிக் கூட்டம் 10-8-45-ந் தேதி கழகக் கட்டிடத்தில் நடைபெறப் போகிறது. ஆண்டுவிழா நடத்துவதைப் பற்றியும் 45 46 வருட வேலைத் திட்டம் தயாரிப்பதையும் யோசிக்கப்படும். ஆதலால் அங்கத்தினர்கள் தவறாது கூட்டத்திற்கு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எம். கே. டி. சுப்பிரமணியன்,
காரியதரிசி.

### புவனகிரி

புவனகிரி திராவிடர் கழக ஆண்டு விழா 12-8-45-ந் தேதி தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கே அன்பழகன், எஸ். கே. சாமி, மதியழகன், இளவழுதி, புலவர் நா. மு. மாணிக்கம், எ. ஆறுமுகம், ஆர். வி. கோபால், இந்திராணி பாலசுப்பிரமணியம், சத்தியவாணிமுத்து முதலியவர்கள் கலந்துகொள்வார்.

### மதுரை

மதுரை நகர் திராவிடர் கழக நிர்வாக கமிட்டிக் கூட்டம் 12-8-45-ந் தேதி பகல் 10 மணிக்கு லட்சுமிபுரம் முதல் குறுக்குத் தெரு தோழர் கெ. ஐ. சுக்குணி அவர்கள் வீட்டில் நடைபெறும். கழக சம்பந்தமான காரியங்கள் கவனிப்பதோடு, மதுரை ஜில்லா முதலாவது மாநாடு கூட்டுவது பற்றி யோசிக்கப்படும்.

எல்லா நிர்வாக உறுப்பினர்களும் இதையே அழைப்பாகக் கருதி வரும்படி கேட்டுக் கொள்கிறேன் என்று தோழர் சி. முத்திருளாண்டி தெரிவிக்கிறார்.

### பொன்மலை

பொன்மலை மேலக்கல்கண்டார் கோட்டை திராவிடர் கழகப் பொதுக் கூட்டம் 11-8-45-ந் தேதி மாலை 6 மணிக்கு திராவிடர் கழக மைதானத்தில் தோழர் து. கிருட்டிணசாமி தலைமையில் நடைபெறும். பெரியார் ஈ. வெ. ராமசாமி, சி. என். அண்ணாதுரை, டாக்டர் து. சிவப்பிரகாசம் முதலியவர்கள் பேசுவார்கள். இரவு 10 மணிக்கு "அவன் பித்தனா" எனும் நாடகம் நடைபெறும்.

### திருச்சி

12-8-45 மாலை தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ., இளம்வழுதி முதலியோர் திருச்சி திராவிடமாணவர் கழகத் துவக்கவிழாச் .. சொற்பொழிவாற்றுவர்.

### சேலம்

சேலம் செவ்வாய்ப்பேட்டை, அருணாசலஞ்செட்டித் தெருவில் உள்ள தியேட்டரில் "திராவிட நாடக சபையரால்" 8-8-45 இரவு 10 மணிக்கு "கமலா அல்லது காதல் மணம்" எனும் சீர்திருத்த நாடகம் நடத்தப்படும்.

* *

சேலம், அம்மாப்பேட்டையில் சேலம் ஜில்லா பார்க்கவகுல முதலாவது மாநாடு 12-8-45-ல் நடைபெறும்.

## கோவைமாவட்ட திராவிடர் கழகம் ஈரோடு

### மாநாடு ஒத்திவைப்பு

ஈரோடு சரஸ்வதி ஹாலில் ஆகஸ்டு முதல்வாரத்தில் நடைபெறவிருந்த 2வது கோவை ஜில்லா திராவிடர் கழக மாநாடு தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களின் சௌகரியத்தை முன்னிட்டு ஆகஸ்டு மாதம் கடைசி வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று மேற்படி கழகக் காரியதரிசிகள் பி. பழனிச்சாமி, எஸ். ஆர். சந்தானம் அறிவிக்கின்றனர்.

காகூர் தோழர் பாலசர்மன் 4-7-45-ல் பாம்பு கடித்து இயற்கை எய்தினார். 'குடிஅரசு' வளர்ச்சிக்கு ரூ. 2 அளிக்கப்பட்டது.

ந. மா. இயக்கத் தோழர்களே!
உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் கவலை வேண்டாம். உங்களுக்கு எழுதுங்கள்: உங்களுக்காக ஏற்பட்ட வைத்தியசாலை இதுதான்.

ஜெயராம் வைத்தியசாலை,
20, காசிவிஸ்வநாதர் கீழ வீதி,
கும்பகோணம்.

"மின்சார வசதி இல்லாத இடங்கள்"
"ஒலிபெருக்கி அமைக்கவேண்டும்"

"நேஷனல் ரேடியோஸ்"

பாட்ரி ஒலிபெருக்கிகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

நேஷனல் ரேடியோஸ்,
பிர்மன் கோவில் தெரு,
கும்பகோணம்.

# புதுவையில் திராவிடக் கழக துவக்கம்

## பிற்பகல் நடவடிக்கை

பிற்பகல் நிகழ்ச்சி 5 மணிக்குத் துவக்கப்பட்டது.

பிற்பகல் மணி 5க்கு மாநாடு துவக்கப்பட்டது. பெரியார் முத்தியாலுபேட்டையில் ஜாகை இருந்ததால் வர சற்று தாமதமானதால் தோழர் அழகிரிசாமி தலைமைவகித்தார். தோழர் பெருமாள் அவர்கள் தெக்கோல் படத்தையும், சத்தியவாணி அம்மை டாக்டர் அம்பட்கார் படத்தையும், தோழர் ஜனார்த்தனம் பன்னீர்செல்வம் படத்தையும் திறந்துவைத்த பின் புரட்சிக் கவிபாரதிதாசன் அவர்கள் படத்தைத் தோழர் பாலசுந்திரம் அவர்கள் திறந்துவைக்க எழுந்து பேசினார்.

இந்தசமயத்தில் பாரதிதாசன் அவர்களது உள்ளூர் அரசியல் கட்சி எதிரிகளால் சிறிது அங்குமிங்கும் கைதட்டலும், சீட்டி அடித்தலுமான கூச்சல் நடந்தது. அதை சமாளித்து சொற்பொழிவு நடந்து வருகையில் பாரதிதாசன் அவர்களை குறைகூறி கூட்டத்தில் இருந்த அவரது எதிரிகள் இரண்டொருவர் கெட்ட வார்த்தைகள் சொல்லவும் கூட்டத்தில் பலர் அவர்களைத் தாக்க முனைந்தார்கள். இதை சாக்காக வைத்து போலீசு சார்ஜெண்டு உடனே கூட்டத்தை நிறுத்திவிட்டார். அந்த ஊர் சட்டப்படி கூட்டத்தை நிறுத்துவது என்பது கூட்டம் நடத்தக் கொடுத்த லைசென்சு கேன்சல் செய்யப்பட்டதாக அருத்தம்; ஆனவே உடனே கூட்டத்தை முடித்துவிடவேண்டியதாயிற்று. பிறகு மக்கள் வெளிவரும்போது பாரதிதாசன் தெருவில் சிலரைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். அதனால் கைகலப்பு ஏற்படும்போல் இருந்ததால் அதைப் போலீசார் தடி அடியால் கலைத்தார்கள்.

### காலித்தனத்துக்குக் காரணம்

காலித்தனத்துக்குக் காரணம் புதுவையில் 2, 3 அரசியல் கட்சி இருக்கின்றன. திராவிட சங்கம் பிறக்க அவ்வூர் பிரமுகர்கள் சிலர் செய்த முயற்சியை அவ்வூர் எதிர்க்கட்சிக்காரர்கள் இது ஒரு கட்சிப் பிரசாரம் என்று கருதிவிட்டார்கள். அதோடு அவ்வூர் சுயமரியாதைக் கட்சியாரின் வேறு கட்சியிலும் சிலர் இருந்ததால் அவர்களுக்குத் தங்கள் கட்சிக்கு எதிர்ப்பிரசாரம் என்று கருதி கலகக்காரர்களை ஏற்பாடு செய்து அவர்களுக்கு உள் ஆதரவாய் இருந்துவிட்டார்களாம். இத்தலட்சணத்தில் போலீசு அதிகாரியில் ஒருவர் பார்ப்பனர். தொழிலாளர் கட்சித் தலைவர்களும் இக் கட்சிகளில் கலந்து இருந்ததால் பாரதிதாசன் அவர்கள் படம் திறக்கும் போது அவர் பெருமையைச் சொன்னது தங்களுக்குப் பொறுக்காமல் கூச்சல் போட்டார்கள். இவ்வளவுதான் கூச்சலுக்கும் குழப்பம் என்பதற்கும் காரணமே ஒழிய வேறில்லை. மற்றபடி,

இதை தேசியப் பத்திரிக்கைகள் என்பவைகளில் சில வழக்கம் போல் அவர்களது இயற்கையானதும் இழிவானதுமான முறையில் திரித்தும், கற்பித்தும் எழுதி இருக்கின்றன. ஆனால் சுதேசமித்திரன் கூடியவரை நேர்மை என்றே சொல்லலாம். அதில் இரண்டொரு புனைந்துரைகளே உள்ளன. ஊருக்குள் அந்தவிதமான எதிர்ப்பு எழுந்ததோ கலாட்டாவோ சிறிதும் கிடையாது; ஈ. வெ. ராவைப் பற்றி யாரும் எதுவும் பேசவில்லை. பெரியார், அண்ணாதுரை முதலியவர்களிடம் எல்லாக் கட்சியாருக்கும் மதிப்பும் மரியாதையும் இருந்தது. தங்கள் சார்பாய் வரும்படி மறுபடிமறுபடி அவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அடுத்த சில மாதங்களில் புதுச்சேரியில் எலெக்ஷன் வரப்போவதால் அவர்கள் கட்சி பிரசாரத்துக்கு இப்படி செய்ய வேண்டியதாக விட்டது. புதுச்சேரி எலக்ஷன் முறையும் சட்டமும் தெரிந்தவர்கள் இதில் அதிசயப்படமாட்டார்கள். ஆகவே சுயமரியாதைக் கட்சியையும், திராவிடர் கட்சியையும் பொருத்தவரை புதுச்சேரியில் பார்ப்பனர்களைத் தவிர வேறுயாருக்கும் அதிருப்தியோ, ஆட்சேபணையோ இல்லை. மாநாட்டை போலீசார் கலைய உத்திரவு போடாமல் இருந்தால் அவர்கள் மக்களைப் பிடித்து வெளியில் தள்ளாமல் இருந்தால் மாநாடு நல்ல வெற்றிகரமான முடிவுக்கு வந்திருக்கும். ஆனாலும் காலையில் தோழர்கள் பெரியார், அண்ணாதுரை, டி. சண்முகம், நெடுஞ்செழியன், அன்பழகன் ஆகியவர்கள் பேச்சுக்கள் முழுவதும் எவ்விதத் தடங்கலும், கூச்சலும் இல்லாமல் நடந்தது. பெண்கள், மக்கள் மிக உற்சாகத்தோடும் ஆவாரத்தோடும் கடைசிவரைக்கேட்டார்கள். ஊர் முழுவதும் இந்தப் பேச்சுக்களைப் பற்றிய பேச்சே நடந்துகொண்டிருக்கிறது.

ஜப்பான்மீது இறுதித் தாக்குதலுக்கான நடவடிக்கைகள் கொந்தளித்துப் பெருகிக்கொண்டிருக்கின்றன.

என்பதை

சென்னை முழுவதும் காணலாம்

இதன் விளைவு என்ன என்பதை எண்ணிப்பார்த்து

மே. த. கவர்னரின்

துருப்புகள் உதவி நிதிக்கு

பணம் உதவி புரியுங்கள்.

(ஹானரரி டிரஷரர், கவர்னர் போர் நிதி C/o இம்பீரியல் பாங்க் இந்தியா என்ற விலாசத்துக்குப் பணம் அனுப்பவும்.)

ரோஜா முத்தையா

# குடி அரசு

1945-வரு ஆகஸ்டு மீ 4-உ

## தீண்டாமை ஒழிய 2000 பேர் இஸ்லாமானால் போதுமா?

திருநெல்வேலி ஜில்லாவில் 2000 பேர்கள் சென்ற மாதத்தில் இஸ்லாமியர் (முஸ்லிம்)களாக ஆகிவிட்டார்கள் என்று பத்திரிகைகளில் சேதிகள் காணப்படுவதோடு அதற்கு ஆக பல இந்து தோழர்கள் என்பவர்கள் மிகமிக வருந்தி அவர்களை இஸ்லாத்தில் இருந்து திருப்பிக்கொண்டு வரவும், இனிமேல் யாரும் இஸ்லாத்தில் சேராமல் இருக்கவும், 'பெரும் பெரும்' முயற்சிகள் எடுத்து அதற்கு ஆக சங்கங்கள் ஸ்தாபித்து மடாதிபதிகள், இந்துமகாசபைத் தலைவர்கள், தேசியத் தலைவர் ஆகியவர்களுக்குப் பணத்துக்கும், உதவிக்கும் முயற்சி எடுத்துக்கொள்வதற்கு அன்றி; பல தீர்மானங்களும், இரகசிய வேண்டுகோள்களும் செய்திருப்பதாகத் தெரிகிறது.

முதலாவதாக இஸ்லாத்தில் சேர்ந்ததாகக் கூறப்படும் மேற்கண்ட 2000 பேர்களும் யார் என்று பார்த்தால் அவர்கள் மத மற்றவர்களும் காட்டுமிராண்டிக் கொள்கைக்கு ஆளானவர்களும் மேல்ஜாதியார் அல்லது இந்துக்கள் என்று சொல்லப்பட்டவர்களால் ஒதுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, தீண்டப்படத்தகாதவர்கள் என்று சொல்லிக் கொடுமைப் படுத்தப்பட்டு வந்தவர்களும்—வருகிறவர்களும்—இனியும் வெகு காலத்திற்குக அவற்றிற்கு ஆளாகப்பட வேண்டியவர்களுமானவர்கள், மற்றும் சொல்ல வேண்டுமானால் இவர்கள் இந்தப்படி ஒதுக்கப்பட்டு தாழ்த்தப்பட்டு தீண்டப்படாதவர்களாய்க் கொடுமைப் படுத்தப்பட்டு வருவது எப்போது முதல், எத்தனை காலமாக என்று சொல்லுவதற்கில்லாமல் கடவுள், வேதம், சாஸ்திரம் என்பவை தோன்றிய காலம் முதல் இருந்துவருவதாகவும், கடவுள், வேதம், சாஸ்திரம், முதலியவைகளின் கட்டளைப்படியே இந்த நிலை அடைந்து வருவதாகவும் சொல்லப்படுபவர்களாகும்.

மற்றும் இத்தகைகளுக்குச் சாஸ்திரங்களில் கடவுள் இல்லை, மதம் இல்லை, வாழ்க்கைச் சுதந்திரம் இல்லை என்று சொல்லப்படுவதோடு சிந்தனையற்ற அடிமைத் தன்மையே அவர்களது வாழ்க்கைப்பயன் என்றும், சட்டம் என்றும் சொல்லப்படுவதாகும். இந்தக் கடவுள்களும் சாஸ்திரங்களும் "சூத்திரர்களுக்கே" கடவுள் கிடையாது, கடவுள் பிரார்த்தனை பக்தி கிடையாது என்றும், அவர்கள் முதல்வருணத்தானுக்கு அடிமையாய் இருப்பதே [illegible] என்றும் சொல்லும்போது, இவர்களுக்கு (ஜாதி வர்ணமே இல்லாதவர்களுக்கு) அப்படிச் சொல்லுவதில் அதிசயமென்ன இருக்க முடியும்? இப்படிப்பட்ட மக்களைத் தான் இன்று (இந்த '2000பேர்கள்) இஸ்லாமானார்கள்' என்று சிலர் சொல்லிப்புலம்புவதும், இதற்கு ஆக இவ்வளவு ஆத்திரமும் எதிர்ப்பு முயற்சியும் செய்வதுமாகும்.

இது புதியதா! இந்த இஸ்லாமாக மாறும் காரியம் நம் நாட்டிற்குப் புதியது என்று யாரும் சொல்லிவிட முடியாது. அன்றியும் இஸ்லாம் என்கின்றதான ஒரே ஒரு மதத்தில்தான் இந்த இப்படிப்பட்ட மக்கள் சேருகிறார்கள் என்றும் சொல்லிவிட முடியாது. எத்தனையோ மதத்தில் இந்தியர்கள் சேர்ந்து வருகிறார்கள்.

இந்தியா கண்டத்தை எடுத்துக் கொண்டால் 100க்கு 10-பேர்கள் இஸ்லாமியர்களாக இருக்கிறார்கள். இவர்கள் இத்தனைபேரும் இந்தியாவின் பூர்வீக மதத்தார்கள் என்றோ அல்லது மகம்மதுநபி அவர்கள் காலத்தில் மதம் மாறி மக்கா, அராபியா முதலிய வெளி இடங்களில் இருந்துவந்தவர்கள் என்றோ கூற முடியாது. 100க்கு 10பேர்களில் 7பேர்களுக்குக் குறையாமலாவது இந்தியாவின் இந்த பூர்வகுடிகள்தான் இஸ்லாமானவர்களாகும். நம் திராவிடநாடு என்பதை எடுத்துக்கொண்டால் இங்குள்ள இஸ்லாமானவர்களில் 100க்கு 99பேர்கள் திராவிட பூர்வ குடிகளேயாகும்.

இவர்கள் மாத்திரமா? இங்குள்ள கிறிஸ்தவர்கள் என்பவர்கள் யார்? என்று பார்த்தால் அவர்களும் ஜெருசலத்தில் இருந்து வந்தவர்களோ அல்லது ஏசுநாதர் காலத்தில் கிறிஸ்தவர்கள் ஆனவர்களோ அல்ல.

இந்தியாவில் சரித்திரம் கண்ட நாள்முதலாகவே மக்கள் பல மதங்களில் சேர்க்கப்பட்டு வருவதைக் கண்டு வருகிறோம். அதன் பலனைத்தான் இங்கு பல மதஸ்தர்களைக் காண்கிறோம். அப்படி இருக்க இன்றுமாத்திரம் அதுவும் இந்த 2000 பேர்கள் இஸ்லாமாக ஆனதற்கு மாத்திரம் ஆத்திரப்படுவதில் மத பக்தியோ, அறிவுடைமையோ, நாணயமோ இருப்பதாக எப்படிச் சொல்ல முடியும்?

கிறிஸ்துவத்தைப் பாருங்கள். சிலர் இஸ்லாமானதற்கு ஆக ஆத்திரப்படும் அறிஞர்களே, நாணயஸ்தர்கள் இதே (தாழ்த்தப்பட்ட) மக்களும் இன்னும் மேல்ஜாதி மக்களும் ஏராளமாக கிறிஸ்தவர்கள் ஆனதற்கும் இன்னும் ஆகிக்கொண்டு வருவதற்கும் என்ன பரிகாரம்? ஆத்திரப்பட்டு என்ன முயற்சிகள் செய்தார்கள்? என்று கேட்கிறோம். அதுமாத்திரமா 'இந்தியாவில்] இந்தியர்களை கிறிஸ்தவர்களாக ஆக்கும் நோக்கத்துடனேயே, கிறிஸ்தவர்களாக ஆக்கும் ஏற்பாடுகளுடனேயே' ஐரோப்பிய கிறிஸ்தவர்களால் இந்தியாவில் வைத்து நடத்தப்பட்டு வரும் ஸ்தாபனங்களுக்கு ஆகவும், மிஷன்களுக்கு ஆகவும் யாராவது ஆத்திரப்பட்டு எதாவது செய்தார்களா என்று கேட்கிறோம், இவை மாத்திரம் அல்லாமல் இந்தியர்களைக் கிறிஸ்தவர்களாக ஆக்குவதற்கு ஆக ஏற்படுத்தி நடத்தி வரும் பெரிய பல ஸ்தாபனங்களுக்குப் பல பெயர்களால் நம்முடைய வரிப்பணங்களில் இருந்து இரண்டு பண உதவி செய்யப்பட்டு வருவதைப் பற்றி எந்த யோக்கியர்களாவது தேசிய, மத, பொருளாதாரப் பக்தர்களாவது ஆத்திரப்பட்டு பாதுகாப்புத் தேடினார்களா? என்று கேட்கிறோம். அந்த ஸ்தாபனங்களில் இன்றும் நம்மவர்கள் கூலிக்கு அடிமையாய் இருந்து உதவி செய்துவருவது

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குறித்து யார் ஆத்திரப்பட்டார்கள்? யார் வெட்கப்பட்டார்கள்? என்றும் கேட்கிறோம்.

திருநெல்வேலியிலேயே இன்று அதாவது எச்ச ஒரு திருநெல்வேலி ஜில்லாவில் 2000 ஒடுக்கப்பட்ட தீண்டப்படாத மக்கள் இஸ்லாத்தில் சேர்ந்தார்களென அதே ஜில்லாவில், இந்தியாவில் எங்கும் இருக்கும் அளவுக்கு மேல் கிறிஸ்தவர்களாக ஆன, ஆகிக்கொண்டு வருகிற மக்கள் எண்ணிக்கை இருந்து வருவதற்கு அதுவும் 'கீழ்ஜாதி' மக்கள் என்பதாக அல்லாமல் 'மேல்ஜாதி' மக்களும் கிறிஸ்தவர்களாக ஆகி இருக்கிறார்களே — ஆகிவருகிறார்களே இதற்கு ஆக யார் ஆத்திரப்பட்டார்கள் — பதறினார்கள் என்று கேட்கின்றோம்.

மற்றும் திருநெல்வேலி, இராமநாதபுரம் முதலிய ஜில்லாக்களில் ஒரு குடும்பத்தில் தாயார் இந்து, தகப்பன் கிறிஸ்தவர்; தகப்பன் இந்து, தாயார் கிறிஸ்தவர்; மனைவி இந்து, கணவன் கிறிஸ்தவர்; சகோதரி இந்து, சகோதரன் கிறிஸ்தவர்; அண்ணன் இந்து, தம்பி கிறிஸ்தவர் என்பதாகக் கலந்த எத்தனையோ குடும்பவாழ்க்கைகள் இருந்து வருவதும் ஏற்பட்டு வருவதும் பார்த்து வருகிற இந்த ஜில்லாவாசிகளுக்கு இன்று இஸ்லாத்தில் சேருவதைப்பற்றி மாத்திரம் இத்தனை ஆத்திரம் ஏன்? என்று கேட்கின்றோம்.

நிற்க தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுடைய இழிநிலையின்று இருந்து கடைத்தேறவேண்டுமானால் அவர்கள் இழிநிலைக்குக் காரணமாய் இருக்கும் மதத்தின்று வெளிப்பட்டு இழிநிலைக்கு இடமில்லாத மதத்தில் சமுதாயத்தில் சேரவேண்டும் என்று பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் 1926-ம் வருஷத்தில் வெளிப்படையாகச் சொல்லி 1930-ம் வருஷம் வரை அவரது சுயமரியாதை இயக்கத்தின் மூலம் தீவிரப் பிரசாரமும் செய்து வந்திருக்கிறார். அன்றியும் திருவாங்கூர் கொச்சி ராஜ்ஜியங்களுக்கும் சென்று அங்கு தாழ்த்தப்பட்ட, தீண்டப்படாத, நெருங்கப்படாதவர்களாய் கருதப்பட்டிருந்த—ஈழவர் என்ற மக்களை 'இந்து மதத்தில் இருந்து விலகி இஸ்லாமியர்களாக நீங்கள் மாறினால் அல்லது இஸ்லாமாக மாறமுற்பட்டால் அல்லாது உங்களது இழிவு நீங்காது" என்று 5 வருஷ காலம் தொடர்ச்சியாக நமது சகாக்களுடன் பிரசாரஞ்செய்துவந்தார். பின்னும் இதன் காரணமாகவே ஈழவ சமுதாய மகாநாடுகளில் 10000, 20000 மக்கள் கூடிய கூட்டங்களில் "ஈழவர்கள் இந்துக்கள் அல்ல" என்றும், "ஈழவர்கள் இஸ்லாம் அல்லது கிறிஸ்தவமதத்தில் சேர்ந்துவிடவேண்டும்" என்றும் ஏகமனதான தீர்மானங்களும் செய்து சுமார் 1000 பேர்கள் வரை மதம் மாறிய பின்பே இன்று அவர்கள் அதாவது ஈழவர்கள் மாத்திரமல்லாமல் பறையர் புலையர் இன்னும் இவைகளில் கீழ் ஜாதி மக்கள் என்பவர்கள் வரை கோவில், குளம், பிரவேசம் முதல் பல வாழ்க்கை உரிமைபெற்று வாழுகிறார்கள். அவ்வளவு மாத்திரமல்லாமல் இந்த உரிமை அளித்த மகாராஜாவுக்கு பிரத்தியட்ச இராமானுஜர் என்று பெயர் அளிக்கப்

# திருச்சியில் திராவிட [ஜஸ்டிஸ்] கட்சி மகாநாடுகள்

★

தென் இந்திய நலஉரிமைச் சங்கம் என்று பெயர் இருந்துவந்து அதன்பேரால் 16-வது ஜஸ்டிஸ்கட்சி மாநாடு சேலத்தில் நடந்தபோது (27-8-44 தேதியில்) திராவிடர்கழகமென்று தமிழிலும் Dravidian Fedaration என்று ஆங்கிலத்திலும் பெயர் மாற்றப்பட்ட ஷை ஜஸ்டிஸ்கட்சியின் 17வது பொது மாநாடு திருச்சியில் செப்டம்பர் மாதத்தில் நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அம்மாநாட்டின்போது சுயமரியாதைக் கட்சி மாநாடும் மற்றும் சில மாநாடுகளும் நடத்த ஏற்பாடுகள் நடக்கின்றன.

இம் மாநாடுகள் இதுவரை நடந்து வந்த எந்த மாநாட்டையும் விட பெரிதாயும் பிரபலமாயும் நடத்தவேண்டும் என்கின்ற ஆசையோடு காரியம் துவக்கப்படுகிறது.

சுமார் 50000 (ஐம்பது ஆயிரம்) மக்கள் கூடும்படியான அளவுக்கு பெரும் செலவில் பந்தல்கள் முதலியவைகள் போட திட்டங்கள் போடப்படுகின்றன. இதற்குத் திராவிட நாட்டு மக்கள் தக்கபடி ஒத்துழைத்து வேண்டிய ஆதரவளிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இம்மாநாடுகள் பற்றிய காரியங்கள் துவக்கப்படுவதற்கு ஆக நாளது ஆகஸ்டு மாதம் 12-ந் தேதி காலை 10 மணிக்கு திருச்சியில் டவுன் ஆல் மண்டபத்தில் ஒரு காரியாலோசனைக் கூட்டம் நடைபெறும். வெளியூர்களில் இருந்தும் பற்றுதல் உள்ள அங்கத்தினர்கள், முக்கியஸ்தர்கள் கூட்டத்திற்கு வந்து ஆலோசனை முதலிய உதவி அளிக்க வேண்டிக் கொள்ளுகிறோம்.

C. N. அண்ணாதுரை,
T. P. வேதாசலம்,
முயற்சி ஆளர்களுக்காக.

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

### 4-8-45ந்தேதி வரை 33815 அங்கத்தினர்கள்
### ரூ. 3351-6-0 சந்தா

ஆகஸ்டு மாதம் 4-ந் தேதி வரை திராவிட கழகத்திற்கு (ஜஸ்டிஸ் கட்சிக்கு) தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வந்துள்ள சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. கோவை | 6008 | 9. சென்னை | 1822 |
| 2. தஞ்சை | 5953 | 10. மதுரை | 1481 |
| 3. சேலம் | 4579 | 11. செங்கல்பட்டு | 900 |
| 4. திருச்சி | 4236 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சில்நாடு) | 216 |
| 5. இராமநாதபுரம் | 2318 | 13. பெங்களூர் | 169 |
| 6. திருநெல்வேலி | 2270 | 14. புதுக்கோட்டை | 95 |
| 7. தென்ஆற்காடு | 1919 | | |
| 8. வடஆற்காடு | 1844 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 33815. சந்தா ரூ. 3351-6-0

---

பட்டு சென்னையில் பார்ப்பனர்கள் ஆதரவால் சிலையும் வைக்கப் பட்டிருக்கிறது.

அதே சமயத்தில்தான் இந்த திருநெல்வேலி மதுரை இராமநாதபுரம் திருச்சி, தென்ஆற்காடு முதலிய ஜில்லாக்களிலும் குடும்பம் குடும்பமாக, கூட்டம் கூட்டமாக தாழ்த்தப்பட்ட மக்கள் இஸ்லாத்தையும் தழுவினார்கள். அந்த விபரங்கள் தழுவியவர்கள் உருவப்படத்துடன் 10, 11வது வால்யூம் குடி அரசில் பெருவாரியாய்க் காணலாம்.

தோழர்களே,

சங்கதி இவ்வளவுதான் என்று கருதிவிடாதீர்கள் இனியும் கேளுங்கள். என்னவெனில்,

1935ல் அதாவது இன்றைக்கு 10வருடத்திற்கு முன்னும், பெரியார் முதல்முதல் சொன்னதற்கு 10வருடத்திற்கு பின்னுமான 13-11-35ல் நாசிக்கில் கூடிய பம்பாய் மாகாண தாழ்த்தப்பட்ட மக்கள் மாநாட்டில் 10ஆயிரக்கணக்கான மக்களின் கூட்டத்தில் தோழர் அம்பேத்கார் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு பெரிய தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அதென்னவெனில்

> "தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த சமூகத்தில் இருந்து அடியுடன் விலகிவிட வேண்டும். சம அந்தஸ்தும் சம உரிமையும் கொடுக்கும் வேறு எந்த மதத்திலாவது சேர்ந்து கொள்ள வேண்டும்."

என்பதாக ஒரு தீர்மானம் ஏகமனதாய் பெருங் கோஷத்தினிடையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இதை நிறைவேற்றும் முன் தலைவர் அம்பேத்கார் பேசிய பேச்சையும் சற்று கவனியுங்கள்.

அவரது கண்களில் நீர் ஒழுக "சகோதரர்களே,

"ஜாதி இந்துக்களின் மனத்தை மாற்றுவதற்கு ஆக நாம் இதுவரை பிரயாசை செய்துவந்த முயற்சிகள் யாவும் பலனளிக்கவில்லை. அவர்களுடன் இருந்துகொண்டு இனியும் நமது சக்தியையும், செல்வத்தையும், நமது இழிவைத் தீர்த்துக்கொள்ளவும், அவர்களோடு கலந்து ஒற்றுமையாக வாழவும் செலவழிக்க முயற்சிப்பது வீணேயாகும். எனது தீர்க்கமான ஆலோசனையின் பேரிலேயே நாம் இந்த சமூகத்தில் இருந்து விலகிவிடுவதே சிறந்த மார்க்கம் என்கின்ற முடிவுக்கு வந்துவிட்டேன். நமக்கு சமத்துவம் கொடுக்க மறுக்குமிடத்தில் இருந்து வெளியேறிவிடுவதே மானமாகும். அவர்களோடு நடத்தும் போராட்டத்தையும் இனி நிறுத்தி நம் காரியத்தை நாமே பார்த்துக்கொள்ளுவோம். நம்மை நாம் இந்துக்கள் என்று கூறிக்கொள்ளும் துர்ப்பாக்கியத்தினால்தான் நாம் இவ்வாறு இழி மக்களாகி கொடுமையாய் நடத்தப்படுகிறோம். நாம் இந்த மதம் அல்லாத வேறு ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தால் நம்மை இவ்வாறு நடத்த எவருக்கும் துணிவு வராது.

"ஆகவே நீங்கள் இனி எந்த மதம் உங்களுக்கு சம அந்தஸ்தைக் கொடுக்கிறதோ அந்த மதத்தில் சேர்ந்துகொள்ளுங்கள் தயங்காதீர்கள். நம்முடைய தவறை நாம் இப்போதாவது திருத்திக்கொள்ளுவோம். பிறக்கும்போதே தீண்டாதவன் என்கின்ற இழிவு என்மீது சுமத்தப்பட்டிருக்கிறது. நான் நிரபராதி, எனக்கு இந்த இழிவு சிறிதும் சம்மந்தப்பட்டதல்ல. பிறவியால் சுமத்தப்பட்டதாம். இனி நான் இக்குற்றத்திற்கு ஆளாகப் போவதில்லை, எப்படியெனில் இறக்கும்போது நான் இந்துவாய் இறக்கப்போவதில்லை. ஏனெனில் அவ்வாறுசெய்துகொள்ளும் சக்தி என் கையில் இருக்கிறது"

என்று சொல்லிக்கொண்டே கண்ணீர்விட்டார். இதைக்கேட்ட சபையோர் அத்தனைபேரும் (10000பேர்) மனம் இளகி தாங்களும் கண்ணீர்விட்டார்கள்.

இந்த தீர்மானத்தை தோழர் சிவராஜ் அவர்கள் (பல இடங்களிலும்) மனப்பூர்வமாய் ஆதரித்திருக்கிறார். இந்த தீர்மானம் செய்த உடன் இராமாயணம், மனுதர்ம சாஸ்திரம், கீதை முதலிய சாஸ்திர புராண இதிகாசங்கள் அம்மாநாட்டிலேயே கொளுத்தப்பட்டிருக்கின்றன. (இவை 21-10-35ந் தேதி 'குடி அரசு' முதலிய பத்திரிகைகளில் இருக்கின்றன) நாசிக்கில் இவை நடந்தவுடன் நமது மாகாணத்தில் சுமார் 20, 30 இடங்களில் இத்தீர்மானம் ஆதரித்து பல மாநாடுகள் கூட்டி ஆமோதிக்கப் பட்டிருக்கிறது.

திருநெல்வேலியிலேயே டாக்டர் ஆர். வி. சொக்கலிங்கம் அவர்கள் தலைமையில் 10-11-35ந் தேதியிலும், திருச்செங்கோட்டில் 11-11-35லும், தூத்துக்குடியில் 7-11-35லும், கோவையில் 27-10-35லும், சென்னையில் 30-10-35ல் மீனாம்பாள் அவர்கள்

தலைமையிலும், 19-10-35ம் தேதி திருச்சி மாநாட்டிலும், மற்றும் சென்னையில் தோழர்கள் ஜகநாதம், சிவஷண்முகம், பாலகுருசிவம் முதலியவர்கள் தனித்தனி மாநாடுகளில் வெகு ஆவேசமாய் ஆதரித்துப் பேசியும் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இதற்குப் பிறகும் பல இடங்களில் ஆதிதிராவிடர்கள் இஸ்லாமியர்களாக ஆகி இருக்கிறார்கள். பல இடங்களில் தோழர்கள் மீனாம்பாள், சிவராஜ் முதலியவர்கள் தலைமையில் இராமாயணம், மனுதர்ம சாஸ்திரம் ஆகியவை கொளுத்தப்பட்டுமிருக்கின்றன.

இவை யாவும் பூனா ஒப்பந்தத்திற்கும் பின் நிகழ்ந்தவை என்பதையும் பூனா ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட இரு தலைவர்களாலேயே நடத்தச் செய்யப்பட்டவை என்பதையும் நினைவுறுத்திக்கொண்டு மேலால் சிந்திக்க வேண்டுகிறோம்.

இவைகள் நடந்ததை, நடப்பதைக் கண்ட பிறகாவது இன்று ஆத்திரப்படும், ஆத்திரப்பட்டு மீட்டிங் போடும், பத்திரிகையில் எழுதும் சிகாமணிகள் என்ன முயற்சி செய்தார்கள் என்று கேட்கிறோம்.

மற்றும்,

1939-ம் வருஷம் சென்னை சட்டசபையில் சமுதாயக் குறைபாடுகளை நீக்கக் கொண்டுவந்த (Removal of Civil Disabilities act of 1938) சட்டத்தில் காங்கிரசுக்கு அடிமைகளான ஆதிதிராவிட சட்டசபை மெம்பர்களை ஏமாற்றிப் பார்ப்பனர்கள் யோக்கியப் பொறுப்பற்ற பித்தலாட்டம் செய்துவிட்டுப் போய்விட்டார்கள். அதில் என்ன செய்தார்கள் என்றால் "யார் வேண்டுமானாலும் ஓட்டல், காப்பிக்கடை உட்பட எந்த லைசென்சு பெற்று நடத்துகிற இடத்துக்கும் பொதுப் பணத்தில் பராமரிக்கப்படுகிற இடத்திற்கும் (ஒட்டிக்கொள்ளும் நோய் இல்லாதவர்களும்) போகலாம்" என்று சட்டம் செய்துவிட்டு "லைசென்சு பெற்ற எவனும் யாரை வேண்டுமானாலும் உள்ளே போகவிடாமல் தடுக்கலாம்" என்று அதற்கு விலக்கியானும் எழுதிவைத்து விட்டுப் போய்விட்டார்கள்.

இதில் ஒரு அதிசயம் என்னவென்றால் காங்கிரஸ் சர்க்காருக்கு ஆக சட்டசபையில் அந்தத் தீர்மானத்தை காங்கிரஸ் மந்திரி தோழர் எஸ். இராமநாதன் படித்துக் காட்டினார். அப்போது சட்டசபை மெம்பர் தோழர் வி. குருவய்யா என்பவர் "இந்த சட்டம் லைசென்சு பெற்ற ஓட்டல்கள் பலகாரக் கடைகளுக்குள்ளும் செல்ல உரிமை கொடுக்கிறதா" என்று கேட்டார். அப்போது தோழர் இராமநாதன் அவர்கள் சர்க்கார் மந்திரியாக சர்க்கார் சார்பில் ஆம் என்று சொல்லி இருக்கிறார் (இது 11-5-39-ம் தேதி சென்னை சட்டசபை நடவடிக்கைப் புத்தகத்தின் வால்யூம் 12 நெம்பர் 10-ல் இருக்கிறது)

இந்தமாதிரியாக ஏய்த்தார்கள். மற்றும் அவர்களுக்கு கோவில்களைத் திறந்துவிடுவதாகச்சொல்லி அதிலும் ஏமாற்றி ஏதோ இரண்டொரு கோவிலை மாத்திரம் ஒரு அளவுக்கு அனுமதித்து வழக்காடவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். பள்ளிக்கூடங்களிலும் ஹாஸ்டல்களிலும் இவர்களைச் செய்யும் அக்கிரமங்களுக்கும் காட்டும் வெறுப்புகளுக்கும் எல்லை இல்லாமல் நடந்து கொள்கிறார்கள். உதாரணமாக திருச்சி நேஷனல் காலேஜ் என்பதில் இரண்டு ஆதிதிராவிடப் பிள்ளைகள் சென்று தங்கள் வகுப்பைச்சொல்லி சேருவதற்கு கெஞ்சினால் அவர்களைப் பார்த்து காலேஜ் தலைவர் 'எண்டா போய் அம்பேத்காரைப் போய்க் கேட்பதுதானே இங்கே ஏன் வருகிறாய் வெட்கமில்லை போ வெளியே' என்றாராம். இப்படி பல 100 சம்பவங்கள் உண்டு. ஆகவே இந்தப்படி யெல்லாம் நடத்தப்படுகிற மக்கள் இஸ்லாம் மார்க்கத்தில் சேருவது ஆத்திரப்படத்தக்கதா? சோரமல் மானம் அற்று, இழிவுபற்றி சிந்தனை அற்று இன்னம் இழிவாய், பறையனாய், தீண்டப்படாதவனாய், சண்டாள அவர்ண ஜாதியாய் இருக்கிறார்களே என்பது ஆத்திரப்படத்தக்கதா என்று கேட்கிறோம்.

கிறிஸ்தவர்கள் செய்வதுபோல் முஸ்லிம்களும் மிஷன் வைத்து சர்வாரியம் பிரசங்கங்கள் முஸ்லிம் பிரசாரம் செய்து வந்திருப்பார்களேயானால் இன்று இந்நாட்டில் 100க்கு 40, 50க்கு மேற்பட்ட எண்ணிக்கை உள்ள மக்கள் இஸ்லாமியர்களாக இருந்திருப்பார்கள் என்பதோடு இங்கு இந்தியா கண்டமே பாகிஸ்தானாகி பிரிட்டிஷ், பிரஞ்சு, போர்த்துகீஸ், ஆரியம் யாவும் ஒழிந்தே போய் இந்தியர் என்கின்ற ஒரே ஜாதி (இனம்) இருந்திருக்கும்.

முஸ்லிம்களுக்கு அவர்களுக்குள் கட்டுப்பாடு இருப்பது போல கிறிஸ்தவர்கள் ஆரியர்கள் போல் தந்திரம், காரியம் சாதிக்கும் முயற்சி அதற்கேற்ற யோசனைகள் முதலியவைகள் போதியது இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். வெளிநாட்டு முஸ்லிம் அரசர்கள் பிரமுகர்கள் ஆகியவர்களும் இதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. முஸ்லிம்கள் மதம் என்றால் அடையாளம் சடங்கு தொழுகை என்பதே முக்கியமானது என்று கருதுகிறார்களே தவிர மற்ற மக்களும் இஸ்லாத்தின் சுகத்தை அனுபவிக்கவேண்டுமே என்பதில் கவலை இல்லை. இஸ்லாம் சரியானபடி பிரசாரம் செய்யப்பட்டிருந்தால் இந்த நாட்டில் மனிதப்பிறவியில் 6, 7 கோடிமக்கள் மிருகத்தில் கேவலமாய் இழிஜீவன்களாய் இருந்துவரமுடியுமா? இருந்துவருவதற்குக் காரணம்தான் என்ன சொல்லமுடியும்? என்று கேட்கிறோம்.

இதற்கு இஸ்லாமியர் பதில் சொல்லாவிட்டாலும் சங்கராச்சாரிகளும், மடாதிபதிகளும், தேசியவாதிகளும், மகாத்மாக்களும் இந்து மகாசபையாரும்; பிரிட்டிஷ் சர்க்காருமாவது பதில் சொல்லுவாரா? என்று கேட்பதோடு 2000 பேர்கள் இஸ்லாமாகிவிட்டதினாலேயே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு பலனும் ஏற்பட்டுவிடாது என்றும், ஆதிதிராவிடர்களில் குறைந்தது 2 லட்சம் பேராவது இந்த வருஷத்திலேயே இஸ்லாமாக வேண்டும் என்றும் ஆசைப்படுகிறோம். இதைவிட நல்லதொரு சமுதாய சீர்திருத்த வேலை உண்மை சீர்திருத்தவாதிகளுக்கு இருப்பதாக நாம் நினைக்கவில்லை.

இஸ்லாமியர் விடுதலைபற்றி நாமும் [illegible]

மில்லை. ஏனெனில் இந்தியாக் கண்டத்தைத் தவிர மற்ற கண்டங்களில் உண்மையிலேயே மத வித்தியாசத்தைப் பற்றிய கவலையோ கவனிப்போ இல்லவே இல்லை. சைனா, ஜப்பான், துருக்கி, பர்ஷியா, ஈஜிப்ட் முதலிய இடங்களில் ஆண்களையோ, பெண்களையோ பார்த்து இந்துவா, கிறிஸ்தவரா, இஸ்லாமா, யூதரா என்று கண்டுபிடிக்கவே முடியாது. மதம் மனத்திலே, சர்ச்சிலே, மசூதியிலேயே ஒழிய வேஷத்தில், வாழ்க்கை நடப்பில், விவகாரத்தில் இல்லை; கிடையவே கிடையாது.

அன்றியும்;

இஸ்லாம், மதம் என்றால் அதில் என்ன இழிவு, குறை, குற்றம் இருக்கிறது? என்று யாராவது சொல்லமுடியுமா? முதலாவது அதுவே கடைசி சீர்திருத்த மதமாகும். அது உலகத்தில் 40, 50 கோடி சுதந்திர மக்களையும் உலகத்தில் பல பெரும் ராஜ்யங்களையும் கொண்டதாகும். சிறப்பான தத்துவங்களையும் அருமையான கலைகளையும், சிற்பங்களையும், அற்புத கட்டடங்களையும் கொண்டதாகும். லக்ஷக்கணக்கான பிரார்த்தனை ஸ்தலங்களைக் கொண்டதுமாகும். பெருங் கவிகளையும், தீர்க்கதரிசிகளையும் கொண்டதாகும். பிறவியில் ஜாதி பேதம், உயர்வு தாழ்வு அற்றதாகும்; உலக முஸ்லிம் யாவரும் சகோதரர்கள் என்ற தன்மையும் சமஉரிமையும் கொண்டதாகும்; ஆதிதிராவிடர்களாலும் மற்றும் யாராலும் அனுசரிக்க இலகுவான ஆஸ்திக மதமாகும்; அதுவும் இந்து மதத்தில் இருப்பதுபோல் பல கடவுள்கள், அதற்குள் மூடநம்பிக்கை காட்டுமிராண்டித்தனமான உருவ வணக்கம், பிள்ளை விளையாட்டு போன்ற பூசை, உற்சவம், சடங்கு ஆகியவை பெரிதும் இல்லாததாகும். இவைகளையெல்லாம் விட இஸ்லாம் மதம் சர்வதேச மதமென்னும் பெருமையைக் கொண்டிருப்பதோடு, சர்வதேச மக்களின் ஆதரவுங் கொண்டதாகும். இப்படிப்பட்ட இஸ்லாம் மதத்தை ஒரு பறையன், சக்கிலி, [illegible] இழிவு

படுத்தி ஊருக்கு வெளியே ஒதுக்கி வைத்திருக்கும் தடுக்கப்பட்ட ஆதிதிராவிடன் அபயஸ்தானமாக, தஞ்சமாக, அடைக்கலமாக தனது தன்மானத்துக்கும் காப்பாக ஏற்றுக் கொண்டால் அதற்கு முஸ்லிம்கள் அபயஸ்தம் கொடுத்து 'இழிவு படாதே, மானத்தைக் காப்பாற்றுகிறேன். உன் இழிவைப் போக்குகிறேன்' என்று கூறி கட்டி அணைத்துக்கொண்டால் பார்ப்பனர்களுக்கும் அவர்களுக்கு அடுத்த சைவர்களுக்கும் மற்ற ஆதிதிராவிடர்களுக்கும் வந்த நஷ்டம் என்ன? ஏற்பட்ட கஷ்டம் என்ன? என்று கேட்கிறோம்.

ஆகவே மோட்சம், நரகம், பாவ மன்னிப்பு, ஆத்மார்த்தம் என்னும் அறிவுக்கு எட்டாததும் வெறும் நம்பிக்கைக்கே பாத்திரமானதுமான காரியங்களைப் பற்றியே அக்கரையற்று பெரிதும் மனிதனின் தன்மானத்திற்கும் மனிதத் தன்மைக்கும் கவலைகொண்டு மதம் மாறிய இந்த 2000 பேர்களையும் பாராட்டுகிறோம்.

## பெரியார் சுற்றுப்பிரயாணம்

பெரியார் ஈ. வெ. ரா. 2-8-45-ந் தேதி கரூர் சுயமரியாதை மகாநாட்டுக்குச் சென்று விட்டு 3-ந் தேதி ஈரோடு வந்தார். ஆனைமலையில் தோழர் நரசிம்மம் பி. ஏ, அவர்களால் கட்டப்பட்டு திராவிட கழகத்துக்கு அளித்து இருக்கும் திராவிடர் கழகக் கட்டிடத்தைத் திறந்துவைக்கவும், திராவிடர் கழகம், சு. ம. கழகம் துவக்கியும் புதுப்பித்தும் வைக்கவும் தோழர்கள் ஜனார்த்தனம், ஈ. வெ. கி. சம்பத் முதலியவர்களுடன் 4-ந் தேதி இரவு ஆனைமலை செல்லுவார். 6-ந் தேதி ஈரோடு திரும்பி 7-ந் தேதி பெங்களூர் செல்லுவார். அங்கு சுயமரியாதைத் திராவிடர் கழகம் திறந்து, 10-ந் தேதி வரை 2, 3 பொதுக் கூட்டங்களில் சொற்பொழிவாற்றிவிட்டு நேரே 11-ந் தேதி திருச்சி மேலகல்கண்டார் கோட்டைத் திராவிட கழகத்தில் சொற்பொழிவாற்றவும் அன்றைய இரவு நடக்கும் சீர்திருத்த நாடகத்திற்கும் சென்று 12-ந் தேதி திருச்சி மகாநாடுகள் சம்பந்தமான ஏற்பாடு கூட்டங்களில் இருந்துவிட்டு 13-ந் தேதி ஈரோடு வந்து சேர்வார்.


இன்றைய திராவிட உலகத்தின் கர்வம்!
ஒவ்வொரு திராவிட மக்களுடைய உள்ளத்தையும், உடலையும் சிலிர்க்க வைக்கிறது!



திரு. N. S. கிருஷ்ணன்
சிறந்த மேதாவி

"புரட்சிக் கலைஞர் திரு. என். எஸ். கே.யைப் பற்றி நாங்கள் வெளியிட்டுவரும் மலர்களைக் குறித்து கிட்டியிருந்து தினே தினே வந்து குவியும் உணர்ச்சியுள்ள கடிதங்களை கண்ட நாங்கள் அடைந்த பெருமையும் எழுச்சியும் சொல்ல இயலாது"

அந்த வெற்றியின் பலனாக இனியும் (திரு. என். எஸ். கே.வைப்பற்றிய) பல மலர்களை வெளியிட துணிந்துள்ளோம்.

மாஜி நவயுகம் (தினசரி பத்திரிகையின்) பத்திராசிரியரும், தமிழ்நாட்டில் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரும், சீர்திருத்த நோக்குடையவரும், பகுத்தறிவாளியுமான திரு. வ. ரா. அவர்கள் எழுதியது. மேலும் இப்பதிப்பில் கவிதைகளும், கட்டுரையும் சேர்த்துள்ளோம். உயர்ந்த பதிப்பு விலை 0—2—6. குறைந்த பிரதிகளே மீதமுள்ளது. வியாபாரிகளுக்கு தக்க லாபம் தரப்படும்.

N. B:— சென்னையில் எல்லா புக்கடைகளிலும் எங்கள் புத்தகம் கிடைக்கும்; கொளும்பிலிருக்கும் நண்பர்களும் மற்ற நண்பர்களும் கடிதம் எழுதும்போது சரியான முகவரியை தெரியப்படுத்தவும்.

விபரங்கட்கு:-
திராவிடன் பதிப்பகம்,
நடுத்தெரு 16 வேலூர். (வ. ஆ.)


ரோஜா முத்தையா

# திருமணங்கள்

8-7-45ந் தேதி சென்னை எழும்பூர், மீனாம்பாள் சிவராஜ் நகரில் தோழர்கள் கே. பி. ஏழுமலை அவர்கட்கும், பக்கிரி அம்மையாருக்கும், சீர்திருத்தத் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

o o

சந்தப்பாளையம் தோழர் பெரியசாமி குமாரன் முருகேசனுக்கும், அன்னபூரணிக்கும் 15-7-45-ந் தேதி திருமணம் நடந்தது. 'குடி அரசு'க்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

ஷையூர் தோழர் முருகன் குமாரன் மு. சுப்பிரமணியனுக்கும், பார்வதியம்மாளுக்கு 15-7-45-ந் தேதி திருமணம் நடந்தது. 'குடி அரசு'க்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

o o

மதுரைத்தோழர் ராஜமாணிக்கத்திற்கும் காந்திமதிக்கும் 20-6-45ல் நடந்த திருமணத்தை முன்னிட்டு "குடி அரசு' வளர்ச்சிக்காக ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

o o

11-7-45ல் கல்லாரப்பட்டி தோழர்கள் அழகம்மைக்கும் ஆர். வீரப்பனுக்கும் தோழர் க. ஸ. காளியப்பசெட்டியார் தலைமையில் தோழர் வீராசனால் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

o o

திருவத்திபுரம், தோழர் த. உலகநாதன்—அ. கமலா திருமணம் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுடைய தலைமையில் நடைபெற்றது.

பாரதிதாசன் கவியோவியம் "குடும்ப விளக்கு" மா. அண்ணா தேவராசனால் விளக்கப்பட்டது.

புலவர்கள் சி. வை. முத்து, கோ. பாலசுந்தரம், கா. கோவிந்தனார் சொற்பொழிவாற்றினர். தோழர் சி. வே. சுப்பராய முதலியார் நன்றிகூறலுடன் மணவிழா முடிவுற்றது.

o o

11-7-45-ல் குடவாயில் தோழர் குஞ்சிதம் பிள்ளையின் மகன் தோழர் செல்வத்தியாகராயருக்கும் அ. நடேசபிள்ளை மகள் சீதா இலக்குமியம்மைக்கும் தோழர் மறைமலையடிகளார் தலைமையில் திருமணம் நடந்தது. தோழர்கள் அரசண்ணனார், பேராசிரியர் சம்பந்தம், கே. கே. நீலகம், ந. மு. கோவிந்தராச நாட்டார், புருடோத்தமன் ஆகியோர் பேசினர்.

திருமணத்தின் பொருட்டு இசைவிருந்தளித்த தோழர் கலியாணசுந்தர தேசிகருக்கு "தமிழிசை நம்பி" எனும் பட்டம் வழங்கப்பட்டது. ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது.

o o

17-6-45-ல் பெங்களூர் உப்புமாரககரில் தோழர் வெ. ரா. வில்லியத்திற்கும், சிம்பங்கி அம்மைக்கும், தோழர் எம். பி. சங்கரசாமி தலைமையில் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் பூ. பார்த்தசாரதி, கிருட்டிணானந்த, சாமுவேல், கிருஷ்ணசாமி, ராசகோபால் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் பார்த்தசாரதியால் ஒரு காலட்சேபம் நடத்தப்பட்டது. "குடி அரசு" வளர்ச்சிக்காக ரூ. 2 அனுப்பப்பட்டது.

o o

தோழர் வி. மாரியப்ப நாடார் தலைமையில் தஞ்சையில் தோழர் ஆழ்வாருக்கும், நாச்சியம்மாளுக்கும் திருமணம் 11-7-45-ல் நடைபெற்றது. தோழர்கள் எஸ். ஆர். சுப்பண்ணா, எம். கே. அஜீஸ் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

'குடி அரசு"க்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

o o

29-6-45-ல் புது வண்டிப்பாளையம் தோழர் புலவர் தண்டபாணிக்கும் தோழர் சரஸ்வதிக்கும் திருமணம் நடந்தது. தோழர்கள் திருச்சி நாகசுந்தரம், முத்துக்குமரன், சீனுவாசன், ந. தி. அரசன், புலவர் ஆ. சிவலிங்கம் ஆகியவர்கள் சீர்திருத்த சொற்பொழிவாற்றினார்கள். வாழ்த்துரைகள் அளிக்கப்பட்டன. 'குடி அரசு', 'திராவிட நாடு' முதலிய பத்திரிகைகளுக்கு நன்கொடை ரூ. 1 வழங்கப்பட்டது.

o o

27-6-45ந் தேதி ஆழங்காத்தான் அப்பாதுரை அவர்கள் குமாரத்தி தோழர் சின்னாயாளுக்கும் வடக்கு விருதாங்கன் கிருஷ்ணசாமி அவர்கள் குமாரன் தோழர் ராமானுஜத்திற்கும், ஆழங்காத்தான் மணமகள் இல்லத்தில் வெள்ளியக்குடி தோழர் முருகேசன் அவர்கள் தலைமை திருமணம் நடைபெற்றது. சம்பந்தம் முதலியோர் சீர்திருத்த திருமணம் என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்கள். அதுசமயம் சில தோழர்கள் கேட்ட கேள்விகட்கு தலைவரால் பதிலளிக்கப்பட்டது. 'குடி அரசு'க்கு ரூபாய் ஒன்று நன்கொடை அளிக்கப்பட்டது.

o o

15-7-45 காலை 9 மணிக்கு வ. ஆ. ஜில்லா திராவிடக் கழக காரியதரிசி எம். நடேச பிள்ளையின் குமாரத்தி என். சொர்ணத்திற்கும், கோவிந்தசாமி பிள்ளை குமாரன் ஜி. ரங்கசாமிக்கும் சீர்திருத்தத் திருமணம் பட்டுக்கோட்டை கே. வி. அழகர்சாமி அவர்கள் தலைமையில் வக்கீல் தோழர் பி. பெரியசாமி பிள்ளை நடத்திவைத்தார்.

கும்பகோணம் தாலுகாவில் கும்பகோணம் மருத்துவர் சங்க ஆதரவில் திருப்பனந்தாள், வலங்கைமான், திருநாகேஸ்வரம், திருப்புவனம் ஆகிய இடங்களில் கிளைச் சங்கங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன.

## தோல் பதனிடும் தொழிற் சங்கம்

ராணிப்பேட்டை வ. ஆ. ஜில்லா தோல் பதனிடும் சங்கக் கூட்டம் தோழர் ஜே. ஜே. தாஸ் தலைமையில் 3-7-45-ந் தேதி நடைபெற்றது. அதுசமயம், மே. த. வைசிராய் அமைக்கப்போகும் புதிய நிர்வாக சபையில் தாழ்த்தப்பட்டோருக்கு 8 ஸ்தானங்கள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகவும், சென்ற 22-5-45-ல் ராணிப்பேட்டை தொழிலாளருக்கு 4-1-45-ல் வாணியம்பாடியில் தீர்மானித்தபடி கூலியும் பஞ்சப்படியும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டும் இன்னும் அதை அமுலுக்குக் கொண்டு வராததால், மீண்டும் அத்தீர்மானத்தை வலியுறுத்துவதாகவும், ஜூலை மாதம் முடிவுக்குள், ராணிப்பேட்டையில் வ. ஆ. ஜி. தோல் பதனிடும் தொழிலாளர்கள் 2-வது மாநாட்டை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## பிறந்த நாள் பாராட்டு

சென்னை ஜில்லா ஷெடியூல்டு வகுப்பு சம்மேளனத்தின் ஆதரவில் தோழர் எம். துர்க்கைபதி தலைமையில் 9-7-45-ல் நடந்த கூட்டத்தில் திவான்பகதூர் ஆர். ஸ்ரீனிவாசன் அவர்களின் 86-வது பிறந்த நாள் சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. தோழர் பரமேஸ்வரன் பேசினார். திவான் பகதூர் ஸ்ரீனிவாசன் அவர்களின் சேவையைப் பாராட்டியும், வைசிராய் நிர்வாகக் கமிட்டியில் தாழ்த்தப்பட்டோருக்கு 3 ஸ்தானங்கள் அளிக்கும்படியும், டாக்டர் அம்பேத்கார், ராவ்பகதூர் சிவராஜ் ஆகியவர்கள் தலைமையில் நம்பிக்கையிருப்பதாகவும், சேரிகளுக்கு அருகில் பால் விடுதிகளை வைக்குமாறு கார்ப்பரேஷன் அதிகாரிகளைக் கேட்டுக்கொள்வதாகவும், ஷெடியூல்டு வகுப்பாருக்கு ஹாஸ்டல் ஏற்படுத்த ஷெ. சம்மேளனத்தாருக்கு உதவி செய்யுமாறு லேபர் கமிஷனரைக் கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

தேவேந்திர வாலிபர் சங்கங்களின் நிர்வாகக் கமிட்டி மெம்பர் தோட்டக்குறிச்சி எஸ். தியாகராஜனும் ஷெ. சங்கங்களின் ஆடிட்டர் மோகனூர் எம். ஆறுமுகமும் சமூக முன்னேற்ற விஷயமாக நாமக்கல் தாலுகாவில் 30-6-45 முதல் 4-7-45-ந் தேதி வரை கிராமப் பிரச்சாரம் செய்தனர்.

# திராவிட நாட்டுச் செய்திகள்

பம்பாய், தாராவி திராவிடநாடுபெருந்திரு நிலையத்தின் மாதாந்திரக் கூட்டம் 1-7-45-ல் தோழர் எஸ். டி. சவரிதாசன் தலைமையில் நடைபெற்றது. திருமணம் செய்துகொள்ள தாய் நாடு செல்லும் தோழர் என். தியாகராஜனின் சேவையைப் பாராட்டிப் பேசினார்கள். வேவல் திட்டத்தைக் குறித்தும் பெரியார் ஈ. வெ. ராவைக் கலக்காமல் செய்யும் எந்தத் திட்டமும் திராவிட மக்களைக் கட்டுப்படுத்தாதென்றும் தோழர் பி. எஸ். வடிவேல் விளக்கமாகப் பேசினார். பிறகு, டி நிலையத்தின் சார்பில் ரூ. 5-ம், பல அன்பர்களால் ரூ. 5-ம் ஆக ரூ. 10 கவி பாரதிதாசன் நிதிக்கு அனுப்பப்பட்டது.

* *

திருநெல்வேலி ஜில்லா தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் 3-7-45-ந் தேதி தூத்துக்குடி ரக்ஷண்யபுரம் தெருவில் நெல்லை முனிசிபல் கவுன்சிலர் தோழர் ஈ. அருணாசலம் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. சம்மேளனத்தின் அவசியம் பற்றி பல தலைவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். 7-8-45-ந் தேதி தாலுகா பிரதிநிதிகள் கூட்டம் நடத்துவதென்றும் அதற்கான செய்ய தோழர்கள் வி. எஸ். நாராயணன், எம். சித்திரவேல் ஆகியவர்களை நியமிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

* *

ஈரோடு சுயேச்சை பீடித் தொழிலாளர் சங்கத்தின் மகா சபைக் கூட்டம் 4-7-45-ந் தேதி தோழர் கே. ஏ. ரஹீம் சாயபு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சொக்கலிங்கம் நாயுடு, எஸ். கரீம் சாயபு தலைவர்களாகவும், கே. ஏ. ரஹீம் சாயபு, எஸ். ஏ. யூசுப் சாயபு காரியதரிசிகளாகவும் கொண்ட நிர்வாகக் கமிட்டி தெரிந்தெடுக்கப்பட்டது.

* *

தூத்துக்குடி கே. ஏ. பி. விசுவநாதம் வாலிபர் சங்க சார்பாக தோழர் எம். ரத்தினம் தலைமையில் 6-7-45-ந் தேதி ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. சென்னை தோழர் என். ஜீவரத்தினம் "புது இந்தியா" என்பது பற்றி விளக்கமாகப் பேசினார்.

* *

குடந்தை மருத்துவர் சங்க மாஜி செயலாளர் எம். சக்கரபாணி குமாரி அகிலாவுக்கு நடைபெற்ற காதணி விழாவை முன்னிட்டு 'குடிஅரசு'க்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

காட்டுப்புத்தூர் தேவேந்திரப் பள்ளர் வாலிபச் சங்கத்தின் சார்பில் 3-7-45-ந் தேதி தோழர் ஈ. கே. வேம்படி [illegible] பனார் தலைமையில் கமிட்டிக் கூட்டம் நடந்தது. அதுசமயம் டையூர் பஞ்சாயத்து போர்டுக்குட்பட்ட பிரதேசத்தில் நடந்துவரும் காப்பி ஹோட்டல்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் சர்க்கார விதிப்படி சாப்பிடுவதற்கு இடவசதி செய்து கொடுக்கும்படி பஞ்சாயத்தார் கவனிக்கவேண்டுமென்றும், பரமசிவம் பிள்ளை என்பவரால் நடத்தப்படும் காப்பி ஹோட்டலில் தேவேந்திரகுல மக்களுக்குப் பலகாரம், டீ முதலியவை கொடுக்க மறுத்துவிட்டதால், டையாருக்கு அளிக்கப்பட்ட லைசென்ஸை ரத்து செய்யவேண்டுமென்றும், பஞ்சாயத்துப் போர்டாரைக் கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

* *

தோழர்கள் பி. கே. ஐயா தலைவராகவும், ஆர். பி. சாமி காரியதரிசியாகவும் கொண்ட பாரதிதாசன் இசையரங்கம் ஒன்று 4-7-45-ந் தேதி கரூரில் துவக்கப்பட்டிருக்கிறது.

* *

கோவை ஜில்லா உணவுப் பொருள் கௌன்சில் கூட்டம் 27-6-45-ஆந் தேதி கலெக்டர் தலைமையில் நடைபெற்றது. இந்த ஜில்லாவில் அரிசி, பருப்பு வகைகள், தானிய வகைகள், கோதுமை முதலியன எவ்வளவு இருப்பு இருக்கின்றன என்பது விளக்கப்பட்டது. கொள்ளேகாலம் தாலுக்காவைத் தவிர இதர தாலுக்காக்களில் கிராமங்களிலும் பங்கீடு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. என்பது அறிவிக்கப்பட்டது. ரேஷன் முறையை எடுத்துவிடவேண்டுமென்றும், கொள்முதல் முறையையும் ரத்து செய்யவேண்டுமென்றும் சர்க்கார் விலை நிர்ணயம் மட்டும் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

* *

9-7-45-ல் தோழர் அ. மாணிமுத்து தலைமையில் நடந்த ஈரோடு மருத்துவர் சங்கக் கூட்டத்தில் ஈரோடு தாலுக்கா மருத்துவர் மகாநாடு நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. இதன் அவசியம் பற்றி தோழர்கள் ஆர். ரங்கசாமி, ஆர். கிருஷ்ணன், ஈ. கே. கருப்பையா, வி. வி. ராமசாமி முதலியவர்கள் பேசினார்கள்.

* *

குடந்தை மீனாட்சி சுந்தரேஸ்வர வாசகசாலையில் 8-7-45-ந் தேதி தோழர் டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்களின் 65-வது பிறந்த நாள் தோழர் பி. விசுவநாதாச்சாரியார் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. டை தலைவர் அவர்களின் மருமகரும் தோழர் டி. டி. சௌரிசங்கர் அவர்களின் மனைவியுமான தோழர் கமலாம்மாள் மறைவுக்கு வருந்துவதாக ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

10-6-45-ந் தேதி நடைபெற்ற மதுரை நாடார் மஹாஜன சங்க கௌன்சில் கூட்டத்தில் 1945-46ஆம் வருஷத்தில் 85 மாணவ மாணவிகளுக்கு ரூ. 6985-12-0 ஸ்காலர் ஷிப்பும் 27 ஆரம்ப பாடசாலைகளுக்கு ரூ. 1116 கிராண்டும், ஆக மொத்தம் ரூ 8101-12-0 சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.

## கல்லாரப்பட்டி படிப்பகம்

இவ்வூர் இலவச வாசகசாலை ஆண்டு விழா சுற்றுவட்ட கிராமத்தார் ஆதரவில் ஆவணித்திங்கள் இறுதிக்குள் நடத்துவதாகவும், அதற்குத் தலைமை தாங்க தோழர் ந. அர்ச்சுனன் அவர்களையும், சொற்பொழிவாற்ற தோழர்கள் அண்ணாதுரை, அழகிரிசாமி முதலியோரை அழைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

## மறைவு

கரூர் தோழர் மு. திருஞானசம்பந்தம் அவர்கள் மகன் முத்துசாமி ஜூலை முதல் நாள் ஞாயிறு இரவு இயற்கை எய்தியது குறித்து 9-7-45-ல் நீத்தார் நினைவு நாள் நடைபெற்றது. நினைவுக் குறியாக 'குடி அரசு', 'திராவிட நாடு' பத்திரிகைக்கு முறையே 2 ரூபாய்கள் நன்கொடை அளிக்கப்பட்டன.

தோழர் குழந்தைவேல் அவர்கள் தனது அனுதாபத்தை அக்குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்கிறார்.

* *

வெங்களூர், தோழர் சி. என். சண்முகம் 8-7-45-ல் இயற்கை எய்தினார்.

## பிறப்பு

கொழும்புத் தோழர் எஸ். கே. மாயகிருஷ்ணன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழர் சங்கரம்மாள் மாயகிருஷ்ணனுக்கு 27-6-45ல் ஓர் ஆண்மகவு பிறந்தது. "திருவள்ளுவன்" என பெயரிடப்பட்டுள்ளது. இதன் நினைவுக் குறியாக 'குடி அரசு' 'திராவிட நாடு' முதலிய இயக்கத்தாள்களுக்கு முறையே ரூபா 3 வீதம் அன்பளிக்கப்பட்டது.

* *

தூத்துக்குடி தோழர் கி. வ. ராமையா அவர்களின் துணைவியார் சிவபாக்கியத்தம்மாளுக்கு 29-6-45ந் தேதி ஓர் ஆண் மகவு பிறந்திருக்கிறது. தாயும் சேயும் நலமாயிருப்பதை முன்னிட்டு நாகம்மாள் ஞாபகார்த்த பகுத்தறிவு கழகத்தாரால் "குடி அரசு" வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பு அனுப்பப்பட்டது.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42 Cutchery [illegible], Erode.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை